# அரண்

பன்னாட்டுத் தமிழாய்வு மின்னிதழ்

(Peer Reviewed - Journal Multidisilinary)

ISSN: 2582-399X



காலாண்டு இதழ்
(ஜனவரி, ஏப்ரல், ஜூலை, அக்டோபர்)
ஆகிய மாதங்களில் வெளிவரும்

*Vol:7 Issue :25 January 2025*

கோட்டை:7 வாயில்:25 ஜனவரி 2025

அரண்

பன்னாட்டுத் தமிழாய்வு மின்னிதழ்

Aran

International e Journal of Tamil Research

# EDITORIAL BOARD

Founder / Editor in Chief

**Dr PRIYAKRISHNAN**

Publisher

**MR P. JAYAKRISHNAN**

Editorial Board Members

**Dr V SELVAKUMAR**

Professor And Head of The Department of Maritime History and Marine Archaeology Tamil University, Thanjavur, TamilNadu, India selvakumar.v@tamiluniversity.ac.in

**Dr. S. KAVITHA**

School of Indian Languages and Comparative Literature,Tamil University, Thanjavur. TamilNadu, India

**Dr.K.DAYANIDHI**

Assistant Professor & Head i/c , Department of Vaishnavism , University of Madras, TamilNadu, India. dayanidhi@unom.ac.in

**Dr O.MUTHIAH**

Professor of Tamil, The Gandhigram Rural Institute (Deemed to be University) Gandhigram - 624 302 Dindigul District, TAMIL NADU

**DR UMADEVI**

Professor In Tamil, Department of Modern Indian Languages And Literery Studies University of Delhi,Delhi . dumadevi@mil.du.ac.in

**DR JAGADEESAN.T.**

Assistant Professor of Tamil, Department of Indian Languages, Faculty of Arts, Banaras Hindu University,Varanasi- 221005, Uttar Pradesh,India.

**DR SENTHIL PRAKASH.S**

Teacher – in- charge/Assistant professor (SG),Department of Tamil, Institute of Languages, Literature& culture, Visva – Bharathi University,Santiniketan,West Bengal, India -731235

Copy Right @ Aran international e journal of Tamil Research/Dr.Priyakrishnan

அரண்

பன்னாட்டுத் தமிழாய்வு மின்னிதழ்

Aran

International e Journal of Tamil Research

# EDITORIAL BOARD

**DR R TAMILSELVAN**

Assistant professor, Aligarh Muslim University, Uttar Pradesh,India-202002

**Dr SWARNAVEL ESWARAN**

Associate Professor Departments of English, and Media and Information
Michigan State University. USA. eswaran@msu.edu

**Dr SILLLALEE A/L S.KANDASAMY**

Assistant Professor University Tunku Abdul Rahman (UTAR), Sungai Long,
Cheras, Selangor, Malaysia. sillalee@utar.edu.my

**Dr (Ms.) NILANKA LIYANAGE**

Senior Lecturer in Dance ,Department of Dance,Drame&Theatre Arts,
Swamy Vipulananda Institute of Aesthetic Stidies,Eastern University Srilanka

**Mrs THULSIVANTHANA UDAYASHANKAR**

Senior lecturer Gr II in English, Swamy Vipulananda Institute of
Aesthetic Stidies ,Eastern University, Srilanka

**Dr N.MUTHUMANI**

Principal, PPG College of Arts And  Science,Coimbatore - 641035.

**Dr KANDASAMY**

Asst Professor Department of History, Rajus college
Rajapaalayam Madurai Tamil nadu herostone78@rrc.edu.in

**Dr S. KARUMPAAYIRAM**

Junior Research officer,Central Institute of Classical Tamil,Chennai-600100

**Dr B. DHANANJAYAN**

Associate Professor, Sir Theagaraya College, Old Washermenpet,
Chennai - 600 021.

# அரண்

பன்னாட்டுத் தமிழாய்வு மின்னிதழ்

# Aran

*International e Journal of Tamil Research*


## EDITORIAL BOARD


**Dr S.KANNADASAN**

Assistant Professor,Tamil Department,The Madura College, Madurai.
Kannadasan@maduracollege.edu.in

**Dr P.SEKAR**

Assistant Professor,Department of Education,Govt.Institute of Advanced Study in Education,Saidapet,Chennai-600015.sekar@iasetamilnadu.ac.in

**DR G.UMAMAHESWARI**

Asst professor and Head , Department of Tamil , P. K. R Arts college for women , Gobichettipalayam , Erode (Dt) , umag@pkrarts.org

**Dr CHANDRAKALA**

Asst Professor and Head, Department of Tamil , PPG college of Arts and Science, Coimbatore - 641035.

---

**நிறுவனர்/பதிப்பாளர்/நிர்வாக ஆசிரியர்**

**இதழாக்கம்**

**திரு ப. ஜெயகிருஷ்ணன்**

**முதன்மை ஆசிரியர்**

**முனைவர் பிரியாகிருஷ்ணன்**



***+917299587879***

www.aranejournal.com

aranjournal@gmail.com


---

**அரண் பன்னாட்டுத் தமிழாய்வு மின்னிதழில் வெளிவரும் ஆய்வுக்கட்டுரைகள் அனைத்தும் (Peer Review)பீர் ரிவியூ செய்யப்பட்டு பதிவு செய்யப்படுகிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறோம்.**

# அகத்தினுள்


**அகப்பொருள் மரபுகளின் பொருண்மைகள்**
**தெ.மதுபாலா**

**தற்காலப் பயன்பாட்டில் தன்மை வினைமுற்றுச் சொற்கள்**
**கோ. கோகிலா**

**தொல்காப்பியச் சொல்லதிகார உரையாசிரியர்கள் சிறந்த ஆசிரியர்கள்**
**முனைவர்.வி.சேகர்**

**ஐங்குறுநூற்றில் மருத நில வாழ்வியல் கோட்பாடு**
**கோ. கோகிலா**

**ஐங்குறுநூற்று மருதத்திணையில் "வேட்கைப் பத்து" வெளிப்படுத்தும் செய்திகள்**
**த.கல்பனா**

**சங்க இலக்கிய அகப்பாடல்களில் தோழியின் உளவியல் கூறுகள்**
**கு.கலையரசி**

**ஆற்றுப்படை இலக்கியத்தில் ஐந்திணைசார் உணவுகள்**
**மு.கௌசல்யா**

**சங்க இலக்கியங்களில் சமூக உறவுகள்**
**முனைவர் வெ. நளினி**

**பறம்பு மக்களின் பரந்த வாழ்வியல்**
**வீ. மஞ்சு**

**குறுநில மன்னர்களின் பொருளாதாரநிலை**
**மு. சதீஸ்குமார்**

**கம்பராமாயணம் காட்டும் வாலிவதைப்படலம்**
**மு.கனகவள்ளி**

**காப்பியங்களில் மரபுக்கருவிகள்**
**வீ.விஜயலட்சுமி**



**அட்டைப்படம் உதவி**
**இணையம்**

**நன்றி**

# அகத்தினுள்


இஸ்லாமிய சூஃபித்துவமும் சடங்கு முறைகளும்
முனைவர் சா.இன்குலாப்

தேவிபாரதியின் "உயிர்த்தெழுதலின் சாபம்" சிறுகதையில் பெண்மன நிலைபாடு
S.Priyadharshini

விமணியின் குழந்தைச் செல்வம் படைப்பு - ஒரு பார்வை
முனைவர் கு.புஷ்பாவதி

அண்ணாவின் நாடகப் பனுவல்கள் மற்றும் நிகழ்த்துகைகளில் அவரது மறுமலர்ச்சி விடுதலை அரசியல் அரங்கு ஓர் ஆய்வு.
திரு.கு.ரவிச்சந்திரன்

பாரதிதாசனின் பெண்ணுலகம்
கா. கவிதா

பாரதியார் படைப்புகளில் பெண்ணியச் சிந்தனைகள்
நா.ரஹமத் நிஷா

“தோட்டியின் மகன்” நாவல் காட்டும் துப்புரவு தொழிலாளர்களின் வாழ்வியல் நிலை
மு. வசந்தி

நூற்றாண்டு கண்ட எழுத்தாளுமை இராஜம் கிருஷ்ணன்-பெண்ணின் குரலாய்
முனைவர் ப.விமலா அண்ணாதுரை

கே.ஆர்.மீராவின் புதினங்களில் வெளிப்படும் பெண்மொழி
நா.சௌந்தர்யா

Creating Virtual Platforms to Showcase Undergraduates' Artworks
1.Yasanthini, G.F



அட்டைப்படம் உதவி
இணையம்

நன்றி

# அகத்தினுள்


**இலக்கியங்களிலும் கல்வெட்டுகளிலும் அரசன்**
**முதுமுனைவர் பிரியாகிருஷ்ணன்**

**Lakśana and Lakśya in Music**
**Srivaramangai Sadagopan**

**சதாசிவ ப்ரம்மேந்திரரின் இசை உருப்படிகளில் பகவத்கீதையின் ஸாராம்ஸம்**
**ச. காயத்ரி தேவி**

**Importance of Sāhityam and the Influence of the Great composers in the musical compositions**
**Ms. Janaki Sadagopan**

**தெலுங்கும் தமிழும் தித்திக்கும் கலைவடிவம் பாகவதமேளா ஓர் ஆய்வுநோக்கு**
**கலாநிதி தாக்ஷாயினி பரமதேவன்**

**தமிழ்நாட்டின் மரபுவழி நிகழ்த்துகலையான தெருக்கூத்து**
**கலாநிதி. ஷார்மிலளா றஞ்சித்குமார்**

**திருமந்திரத்தில் காணப்படும் உடல்சார் கருத்துகள் நவீன அறிவியல் பார்வை**
**பேராசிரியர் முனைவர் சு.ஹரிபிரசாத்**



அட்டைப்படம் உதவி
இணையம்
நன்றி


தமிழ்

# கம்பராமாயணம் காட்டும் வாலிவதைப்படலம்

# *Kambaramayanam's portrait of vali's death*

**ஆய்வாளர்**
**மு.கனகவள்ளி**
முதுகலை தமிழ் இலக்கியம்
இரண்டாம் ஆண்டு,
சக்தி மகளிர் கலை மற்றும்
அறிவியல் கல்லூரி,
ஒட்டன்சத்திரம்.

**நெறியாளர்**
முனை**வர். சொ.கோகில மீனா *M.A., M.Phil., B.Ed., Ph.D.,***
தமிழ்த்துறைத் தலைவர்(பொ) மற்றும் உதவிப்பேராசிரியர்,
சக்தி மகளிர் கலை மற்றும் அறிவியல் கல்லூரி,
ஒட்டன்சத்திரம்.

**ஆய்வுச் சுருக்கம்**

இப்படலத்தின் வாயிலாக வாலியும், சுக்ரிவனும் போர் புரியும் காட்சிகளை கம்பரின் பாடல்கள் படம் பிடித்துக் காட்டுகிறது. கம்பனின் கற்பனை ஆற்றலுக்கு போர் காட்சிகளே சான்றாக அமைகின்றன. வாலி தன் தவறை உணர்ந்து இராமனை இகழாமல் தம் பாடல்களால் போற்றி உரைத்தான் என்பதை, கம்பர் நயம்பட தன் பாடல்களில் காட்டியுள்ளது தெளிவாகிறது. வாலி வதைப்படலத்தில் கம்பரின் கவித்திறத்தையும் கற்பனை ஆற்றலையும் அழகாக எடுத்துரைத்துள்ளதை இக்கட்டுரையின் வாயிலாக அறிய முடிகிறது.

**திறவுச்சொற்கள்**

**வாலி, கம்பன், இராமன்,சீதை,சுக்ரீவன்**

**முன்னுரை**

தமிழ் இலக்கியத்தில் மிகச் சிறப்பாகப் போற்றப்படும் காப்பிய நூல்களுள் ஒன்று கம்பராமாயணம் ஆகும். சமய காப்பியங்களுள் இது வைணவ சமயத்தைச் சார்ந்தது. இராமனது வரலாற்றைக் கூறும் நூல் இராமாயணம் எனப்பட்டது. கம்பராமாயணம் எனும் நூல் குலோத்துங்க சோழனின் ஆணைப்படி கம்பர் எனும் பெரும் புலவரால் இயற்றப்பட்ட தமிழ் நூலாகும். கம்பரால் இயற்றப்பட்ட கம்பராமாயணம் ஒரு வழிநூலாகும். இது வடமொழியில் வால்மீகி என்பவர் இயற்றிய இராமாயணத்தைத் தழுவி எழுதப்பட்ட நூல் ஆகும். இது ஒரு வழிநூலாகவே இருந்தாலும் கம்பர் தனக்கே உரித்தான பாணியில் கருப்பொருள் சிதையாமல் தமிழ் மொழியில் இயற்றியுள்ளார். கம்பர் தாம் இயற்றிய நூலுக்கு இராமாவதாரம் எனப் பெயரிட்டார். கம்பர் இயற்றிய இராமாயணம் கம்பராமாயாணம் எனப்பட்டது. கம்பராமாயணம் மனிதர் யாவர்க்கும் பயன்தரும் ஒழுக்க முறைகளையும், பண்பாட்டினையும், ஆட்சி சிறப்பினையும் விளக்குகிறது. கம்பராமாயணம் பாலகாண்டம், அயோத்தியா காண்டம், ஆரணிய காண்டம், கிட்கிந்தா காண்டம்,சுந்தர காண்டம், யுத்த காண்டம் என்று ஆறு காண்டங்களையும் கொண்டு அமைந்துள்ளது.

**வாலிவதைப்படலம்**

கிட்கிந்தா காண்டத்தில் ஏழாவது படலமாக வாலி வதைப்படலம் உள்ளது. இதற்கு மோட்ச படலம் என்ற பெயரும் உண்டு. இராமன் கிட்கிந்தையின் மன்னனான வாலியைக் கொன்ற நிகழ்ச்சியைக் கூறும் பகுதி இப்படலமாகும்.

**“வெங்க ணாளி யேறு மீளி**
**மாவும் வேக நாகமும்**
**சிங்க வேறி ரண்டொ டுந்தி**
**ரண்ட வன்ன செய்கையார்**
**தங்கு**
**சால மூல மார்த**
**மால மேலம் வாழைமாப்**
**பொங்கு நாக முந்து வன்று**
**சார லூடு போயினார் “**

(கம்பராமாயணம். கிட்கிந்தா காண்டம்.பாடல். 97)

ஆண்யாளியும், சிங்கங்கள் போன்ற செய்கையனை உடைய வீரர்கள், ஆச்சா மரங்களும், மூலமரங்களும், பச்சிலை மரங்களும், ஏலமும் மாலை போல் செழுமை மிக்க சுர புன்னை மரங்களும் அடர்ந்துள்ள மலைச்சாரல் வழியே இராமன், இலக்குவன், சுக்ரீவன், அனுமன் ஆகிய நால்வரும் பிற வானர வீரர்களோடு சென்றனர். வாலியைக் கொல்லுவதற்கான வழியை ஆராய்ந்தனர். போர் நடக்கையில் தான் வேறுபுறம் நின்று வாலி மீது அம்பு தொடுப்பதாக இராமன் கூற சுக்ரீவன் அதை ஏற்றுக்கொண்டு வாலியை வலியப் போருக்கு அழைத்தான். வாலியும் போருக்குப் புறப்படத் தாரை இராமன் துணையொடு சுக்ரீவன் போரிட வந்துள்ளமையைச் சுட்டிப் போருக்குச் செல்வதைத் தடுத்தாள்.

**“தம்பிய ரல்லது தனக்கு வேறுயிர்**
**இம்பரி னிலதன வெண்ணி யேய்ந்தவன்**
**எம்பியும் யானுமுற் றெதிர்ந்த போரினில்**
**அம்பிடை தொடுக்குமோ வருளி னாழியான்”**

(கம்பராமாயணம். கிட்கிந்தா காண்டம்.பாடல். 109)

தம்பியரைத் தன் உயிரெனக் கருதும் இராமன், உடன்பிறந்தாருக்கு இடை ஏற்பட்ட போரில், பகைமையை நீக்கி ஒன்றுபடுத்த முயல்வானேயன்றி ஒருபக்கம் சார்ந்து தனக்கென அம்பினைத் தொடுக்கமாட்டான் என்ற நம்பிக்கையில் வாலி எம்பியும் யானும் உற்றெதிர்ந்த போரினில் அம்பு தொடுக்குமோ? என்றான். வாலி, இராமனின் அறப்பண்புகளைத் தாரைக்கு உணர்த்திவிட்டுப் போரை விரும்பிக் குன்றின் புறத்தே வந்தான். பேராற்றல் பெற்ற வாலி, சுக்ரீவனை இராமன் வியந்து பேச, இலக்குவன் சுக்ரீவனை ஐயுற்றுப் பேசினான். நட்பு கொள்வாரிடம் உள்ள நற்பண்புகளை மட்டுமே ஏற்றுக்கொள்ள வேண்டுமென இராமன் இலக்குவனுக்கு மறுமொழி உரைத்தான். வாலிக்கும் சுக்ரீவனுக்கும் இடையே போர் கடுமையாக நடந்தது.

**வாலியின் வீரத்தோற்றம்**

வாலி தோள்வன்மையினால் ஒப்பற்ற பெரிய மலையினை ஒத்தவனாக விளங்கினான். கொடுமையுடைய இரணியன் குறித்துக் காட்டிய வலிய தூணிடத்தே

வெளிப்பட்டுத் தோன்றிய பெருமை வாய்ந்த நரசிங்கத்தையொத்து மலையின் வழியே வந்து தோன்றியனாய் யாவரும் அஞ்சி நடுங்கும்படி சுக்ரீவனுக்கு எதிரே வந்து நின்றான்.

**வாலி, சுக்ரீவன் போர்**

வாலியும் சுக்ரீவனும் எதிர்த்து நின்ற நிலையில், குன்றோடு குன்று எதிர்ப்பது போலும், இருசிங்கங்கள் எதிர்ப்பன போலும் எதிர்த்தனர். வாலி, சுக்ரீவனை யானையைச் சிங்கம் அழிப்பது போல, அவன் வலிமை அகலும்படி செய்ய, சுக்ரீவன் இராமனை அடைந்து உதவி வேண்டினான்.

**சுக்ரீவன் கொடிப்பூ அணிந்து போர் செய்தல்**

**"மலைந்த போதிளைத் திரவிசே**
**யையன்மாட் டணுகி**
**உலைந்த சிந்தையோ டுணங்கினன்**
**வணங்கிட வுள்ளம்**
**குலைந்தி டேலுமை வேற்றுமை**
**தெரிந்திலங் கொடிப்பூ**
**மிலைந்து செல்கென விடுத்தன**
**னெதிர்த்தனன் மீட்டும். "**

(கம்பராமாயணம். கிட்கிந்தா காண்டம்.பாடல். 117)

வாலியும் சுக்ரீவனும் நிறத்தாலும் வடிவத்தாலும் ஒத்து விளங்குவதால் போர் செய்கையில் இன்னின்னார் என்ற வேறுபாடு தெரியாமல் தவறிப்போய் அம்பு சுக்ரீவன் மீது பட்டுவிடுமோ? என்ற ஐயத்தால் இராமன் அம்பு எய்யாமல் இருந்தான். வேறுபாடு தெரியக் கொடிப் பூவைச் சூட்டிக் கொண்டால் வாலி மேல் அம்பு தொடுக்கலாம் என இராமன் கூற, அவ்வாறே அடையாள மாலையைச் சூட்டி சுக்ரீவன் மீண்டும் வாலியை எதிர்த்து போரிடலாயினான் என்பதை காப்பியத்தின் வழி அறிய முடிகிறது.

**இராமன் அம்பு செலுத்துதல்**

வாலி சுக்ரீவனை மேலே தூக்கி கீழே எறிந்து கொல்ல முயன்றபோது, இராமன் வாலியின் மார்பில் அம்பினைச் செலுத்த வாலி மண்ணில் சாய்ந்தான். தன் மீது அம்பு செலுத்தியவன் யார் என அறிய வாலி அம்பைப் பறிக்க அதனால் குருதி வெள்ளம் பெருக, அதைக் கண்டு உடன்பிறந்த பாசத்தால் சுக்ரீவன் கண்களில் நீர்மல்க நிலமிசை வீழ்ந்தான்.

**அம்பில் இராம நாமம் காணல்**

வாலி தன் மார்பில் தைத்த அம்பில் 'இராமன்' என்னும் நாமத்தைக் கண்டான். இராமன் அறமற்ற செயலைச் செய்துவிட்டதாக இராமனைப் பலவாறு இகழ்ந்தான். இராமன் தான் செய்தது முறையான செயலே எனத் தெளிவுபடுத்தினான். வாலி தன்னை விலங்கெனக் கூறிக்கொண்டு தன்பால் சிறிதும் குற்றம் இல்லை என உணர்த்த, உருவத்தால் விலங்காயினும் நல்லறிவு பெற்ற வாலி செய்த செயல் குற்றமுடைத்து என இராமன் விளக்கினான். அதற்கு வாலி, தகாத வகையில் மறைந்து நின்று அம்பு எய்தக் காரணம் யாது? என வினவ, அதற்கு

இலக்குவன் விடையளித்தான். விலங்குகளை வேடர்கள் மறைந்திருந்தும் வேட்டையாடுவர், எனக் கூறினான்.

**"முன்புநின் றம்பி வந்து சரண்புக முறையி லோயைத்**

**தென்புலத் துய்ப்ப னென்று செப்பினன் செருவி னீயும்**

**அன்பினை யுயிருக் காகியடைக்கலம் யானு மென்பாய்**

**என்பது கருதி யண்ணன் மறைந்துநின் றெய்த தென்றான்"**

(கம்பராமாயணம். கிட்கிந்தா காண்டம்.பாடல். 158)

சுக்ரீவன் முதலில் வந்து சரண் வேண்டியதால் அவனைக் காக்கும் பொறுப்பும், முறையற்ற செயல் செய்தமையால் வாலியைத் தண்டிக்க வேண்டிய பொறுப்பும் இராமனைச் சார்ந்ததாயிற்று. இந்நிலையில் வாலியும் அபயம் வேண்டினால் அவனைத் தண்டிக்க முடியாமல் போவதோடு தான் சுக்ரீவனுக்கு கொடுத்த வாக்கும் தவறிப்போகும். அதனால் வாலியின் முன்னர் இராமன் வரவில்லை என இலக்குவன் விளக்கினான்.

**வாலியின் மனமாற்றம்**

வாலி மனம் மாறி இராமனிடம் தன்னை மன்னிக்குமாறு வேண்டி, அவன் பெருமைகளைக் கூறித் துதித்தான். தன் தம்பி சுக்ரீவன் தவறு செய்யின், அவன் மீது அம்பு தொடுக்க வேண்டாம் என ஒரு வரம் வேண்டினான். அனுமனின் ஆற்றலை இராமனுக்கு வாலி எடுத்துரைத்தான். சுக்ரிவனுக்குப் பல அறிவுரைகள் கூறி, அவனை இராமனிடத்தில் அடைக்கலப்படுத்தினான். போர்க்களம் வந்த அங்கதன் குருதி வெள்ளத்தில் தந்தையைக் கண்டு அலற, வாலி அவனைத் தேற்றினான். இராமன் பெருமைகளை அறிவுறுத்தினான். அவனை இராமனிடம் கையடைப்படுத்த இராமன் அங்கதனுக்கு உடைவாள் அளித்து ஏற்க, வாலி வீடுபேறு அடைந்தான். வாலி மார்பில் தைத்த அம்பு இராமனிடம் மீண்டது. வாலிக்கு ஏற்பட்ட துயர் கேட்டுத் தாரை போர்க்களம் வந்து வாலியின் மேல் வீழ்ந்து புலம்பினாள். அவளை அந்தப்புரம் செலுத்தி, அனுமன் வாலிக்குரிய இறுதிக் கடன்களை அங்கதனைக் கொண்டு செய்வித்தான்.

**ஆய்வுக்கு துணை நின்ற நூல்கள்**

1. கம்பராமாயணம் கிட்கிந்தா காண்டம் ஸி.குமாரசாமி நாயுடு சன்ஸ். சென்னை.

அரண் பன்னாட்டுத் தமிழாய்வு மின்னிதழ்
ARAN International e-Journal of Tamil Research

# அரண்

பன்னாட்டுத் தமிழாய்வு மின்னிதழ்

## அறிவிப்பு / Announcement

அன்பான தமிழ்ச் சொந்தங்களே

வணக்கம்.

வரும் 2025, ஏப்ரல் மாதம் வெளிவரும் அரண் பன்னாட்டுத் தமிழாய்வு மின்னிதழுக்கான ஆய்வுக் கட்டுரைகள் ஆய்வாளர்களிடமிருந்து வரவேற்கப்படுகின்றன.

கட்டுரை வந்து சேர வேண்டிய கடைசி நாள்- ஏப்ரல் 10. அதற்கு பின் வரும் கட்டுரைகள் ஏப்ரல் இதழில் இடம்பெறாது என்பதை தெரிவித்துக் கொள்கிறோம்.

www.aranejournal.com